# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 19 வியாழக்கிழமை (05.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:510


# ஒஸ்லோவிலா? ஜெனிவாவிலா?

# பேச்சு எங்கு என்பதில் இழுபறி!

## சிறிய விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதிலும் நெருக்கடியை எதிர்நோக்கும் அனுசரணையாளர்கள்

கொழும்பு, ஒக்ரோபர் 5

நோர்வே அனுசரணைத் தரப்பின் ஏற்பாட்டில் நிபந்தனையற்ற வகையில் பேச்சுகளை நடத்துவதற்கு இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ள போதும், அப் பேச்சுகளை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யும் விவகாரத்தில் - அற்ப - சிறிய - விடயங்களிலும் - பல நெருக்கடிகளை அனுசரணைத் தரப்பு எதிர்கொண்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேசப் பேச்சுகளை எங்கு நடத்துவது என்பதிலும் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை வெளியேற்றக் கோரி ஜே.வி.பியினர் பெரும் ஆர்ப்பாட்டம்


### கொழும்பில் நேற்றுமாலை போக்குவரத்துகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஒக்.5

அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுமாறு கோரி ஜே.வி.பி. உட்பட பல பௌத்த அமைப்புகள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு நகரில் முக்கிய வீதிகளில் நேற்று மாலை போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் தங்கியிருக்கும் சமயத்தில் நோர்வே தூதரகத்தை நோக்கி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் நோர்வேயை அப்பணியில் இருந்து வெளியேற்றவேண்டும் என்று கோரும் சுலோகங்களுடன் நூற்றுக்கணக்கானோர் பேரணியாகத் திரண்டு நோர்வே தூதரகத்தை நோக்கிச் சென்றனர்.




நோர்வேக்கும், சமாதான முயற்சிகளுக்கும் எதிரான கோஷங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன. நோர்வேயின் விசேட தூதர் 'வெள்ளைப் புலி' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

மாணவர்கள், ஜே.வி.பி. ஆதரவாளர்கள், பௌத்த தேரர்கள் எனப் பலரைப் பெரும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று படை நகர்வு

மட்டக்களப்பு, ஒக்.5

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 3 மணிக்கு படையினர் மேற்கொண்ட படைநகர்வை தாங்கள் முறியடித்துள்ளனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

வவுணதீவு மங்கிக்கட்டு ஊடாக நேற்று அதிகாலை மேற்கொண்ட படைநகர்வை எதிர்த்தாக்குதல் மூலம் முறியடித்துள்ளனர் என்றும் - இத்தாக்குதல் 2 மணிநேரம் இடம்பெற்றது என்றும்- புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வவுணதீவு, மங்கிக்கட்டு, மகிழவெட்டுவான் ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (1)

## தமிழ்க் கூட்டமைப்பினர் 5ஆவது நாளாக நேற்று சபையில் சத்தியாக்கிரகம்

கொழும்பு,ஒக்.5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றும் ஐந்தாவது நாளாக நாடாளுமன்றத்தில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுக் காலை சபைக்கு வந்திருக்கவில்லை.

கூட்டமைப்பு எம்.பிக்களின் சத்தியாக்கிரகம் நேற்று ஐந்தாவது நாளாகத் தொடர்ந்த போதும் அரச தரப்பு அவ்விடயம் குறித்து நேற்றும் அலட்டிக் கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பேச்சில் முஸ்லிம்களின் பங்கு போவரிடம் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.05

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சில் முஸ்லிம் சமூகத்தவரின் பங்கும் அவசியமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நோர்வேயின் சமாதானத் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவருக்கும், ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை 11.45 மணியளவில் ஹக்கீமின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. அந்த சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்கு முன்வந்திருப்பது மகிழ்ச்சிகரமான விடயமாகும். இந்தப் பேச்சில் முஸ்லிம் சமூகத்தின் பங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கு குடாரப்பில் கிபிர் விமானங்கள் குண்டு மழை!

### சுனாமி அகதிகளின் 4 வீடுகள் நிர்மூலம்

கிளிநொச்சி,ஒக்.5

வடமராட்சி கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குடாரப்பு பகுதியில் நேற்று விமானப்படை குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கிறது.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் இப்பகுதி வான்பரப்பில் வட்டமிட்ட 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்கள் அந்தப் பிரதேசத்தில் குறைந்தது ஒன்பது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின்போது அப்பகுதியில் நிறுவப்பட்டிருந்த ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமான வீடுகளில் நான்கு வீடுகள் தகர்ந்துபோயின என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஆயர் இல்லத்தில் நேற்று முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

கற்றல் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அறிக்கை ஒன்றும் நேற்றிரவு விடுக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று ஒக்ரோபர் 4ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் மாணவர் ஒன்றியத்தின் வேண்டுகோளின் பேரில் அரசாங்க அதிபர், யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர், பேராசிரியர்கள், கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள், மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கலந்துரையாடல் ஒன்று ஆயர் தலைமையில் நடைபெற்றது. மாணவர் சமூகம் இன்றைய சூழலில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

அவற்றுக்கு செவிமடுத்த ஏனையோர் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாணவர்களின் பிரச்சினைகள் உண்மையானதென ஏற்றுக்கொண்டு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

அதிபர்களும் ஆசிரியர்களும் எதிர் நோக்கும் இராணுவ அச்சுறுத்தல்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைக்கு சென்று நேரத்துக்கு வீடு திரும்ப போதிய போக்குவரத்து

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்போம்; கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பியுங்கள்

## மாணவர்களிடம் உயர்கல்விச் சமூகம் வேண்டுதல்

யாழ்ப்பாணம்,ஒக்.5

கெடுபிடிகளையும் நெருக்கடிகளையும் மன உறுதியோடு எதிர்கொண்டு எமது கல்வியை முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகிறது எனக் கருதுகிறோம்.

எனவே பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மிக விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு உயர்கல்விச் சமூகத்தின் சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவித்திருக்கிறார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர் பிரதிநிதிகள் பங்குகொண்ட யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்வி நிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

மு.ப. 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.45 மணி வரை மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவ் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

குடாநாட்டின் இன்றைய கல்வி நிலை குறித்து பல கோணக் கருத்துக்களும் நேற்றைய கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் பதில் துணைவேந்தர் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்.

அறிக்கையின் முழு விவரமும் வருமாறு-

கடந்த 11.08.2006 இற்குப் பின் ஏற்பட்ட மிகவும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக எமது கல்விச் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். இப்பாதிப்பு எமது எதிர்கால சந்ததியின் நலனிற்கு ஊறு விளைவிப்பதாகவே அமையும். ஆகவே எத்துணை நெருக்கடிகள் மிகுந்துவரினும் கல்வியே எமது மூலதனம். அதுவே எமது ஆணிவேர் என்பதை மனதில் இருத்தி வலிகளைத் தாங்கும் வல்லமையோடு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு மாணவ சமூகத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

### தீராத பிரச்சினைகள்

அரை வயிறு உணவும், சீரற்ற போக்குவரத்து ஒழுங்குகளும், பொருளாதார நெருக்கடிகளும், உயிர் அச்சுறுத்தலும், இதர தீராத பிரச்சினைகளும் தொடரும் எமது நிலைமையை மாற்ற உயர் கல்விச் சமூகம் தனது முழுமையான பலத்தைப் பிரயோகித்து செயற்படும் என உறுதி வழங்குகின்றோம்.

பெற்றோர்களை குடும்ப பொருளாதார சுமை மிகவும் அழுத்துவதை அறிவோம். இச்சுமைகளுக்கு மத்தியிலும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு அவர்களது கல்வி தொடர்வதற்கு உங்களால் இயன்ற சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தியாகங்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட கல்விப் பயிர்

தியாகங்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட எமது கல்விப் பயிரை அழியவிடாது பேண மிக விரைவாக பாடசாலைகளுக்குத் திரும்பி கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்க வேண்டுமென மாணவர்களை விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் அர்ப்பணிப்பும் தளராத பற்றுறுதியும் கல்வியிலும் நிலைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு எமது கல்வியை அழிய விடாது நிலைக்க வைக்க திடசங்கற்பம் பூணுமாறும் வேண்டுகின்றோம்.

நாம் எமது கல்வியை இடைநிறுத்தி வைப்பதால் தேசியப் பரீட்சைகள் பிற்போடப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றைக் கருத்தில்கொண்டு உங்கள் கல்வியைத் தொடரவேண்டும். பாடசாலை தவிர்ந்த நேரங்களில் கல்வியில் அக்கறை செலுத்தி எமது கல்வியை நாமே மேம்படுத்திக்கொள்ளவேண்டும்.

### சுமுகநிலை ஏற்பட்டு விட்டதாக எவரும் கருதக்கூடாது

நாம் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்வதைக் கொண்டு தற்போது எமது பிரதேசத்தில் சுமுக நிலை ஏற்பட்டுவிட்டதாக எவரும் கருதக்கூடாது. கெடுபிடிகளையும் நெருக்கடிகளையும் மன வுறுதியோடு எதிர்கொண்டு எமது கல்வியை முன்னெடுக்கவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகவிருக்கிறது எனக் கருதுகிறோம். எனவே பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மிக விரைவில் மீள ஆரம்பிக்கவேண்டுமென வேண்டி நிற்கின்றோம்.

எமது சமூகம், சிறப்பாக மாணவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்திற்கு விரைவாகக் கொண்டு வந்து அப்பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத் தர உயர் கல்விச் சமூகம் தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று உள்ளது.

# குடாநாட்டில் கொல்லப்பட்டோர் விவரம்; மனித உரிமை ஆணைக்குழு சேகரிக்கிறது

## திகதி வாரியாகப் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.5

குடாநாட்டில் கடந்த ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் கொலை செய்யப்பட்டவர்களின் விவரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலம் சேகரிக்க உள்ளது.

கொலையுண்டவர்களின் உறவினர்களை, விவரங்களைத் தமது அலுவலகத்துக்கு வந்து சமர்ப்பிக்கும்படி ஆணைக்குழு கோரியுள்ளது.

கீழ்க்காணும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.

நாளை - யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

நாளைமறுதினம் சனிக்கிழமை - மாநகர சபை எல்லைக்கு வெளியே உள்ள வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இம்மாதம் 9ஆம் திகதி - வடமராட்சி.
10 ஆம் திகதி தென்மராட்சி.
11ஆம் திகதி - தீவகம். (1)



இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர் நேற்று புதன்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

# கோக்குவிலில் ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை பின்னர் அந்தப் பகுதியில் குண்டு வெடித்தது

யாழ்ப்பாணம்,ஒக்.5

கொக்குவில், குளங்கரை ஒழுங்கைப் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஓட்டோ சாரதி ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் சற்றுப் பின்னர் அந்த ஓட்டோ நிறுத்தப்பட்ட பகுதியில் குண்டு ஒன்று வெடித்ததில் ஓட்டோ சேதமடைந்தது.

ஓட்டோச் சாரதியின் சடலம் கருகிய நிலையில் மீட்கப்பட்டது.

கொட்டடி, முஸ்லிம் கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த சண்முகம் சுப்பிரமணியம் (வயது 50) என்பவரே கொலையுண்டவர் ஆவார்.

கொலையுண்டவர் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த வேளை அவரை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள், அவரைச் சுட்டுக் கொன்றனர் என்றும் -

சம்பவத்தைக் கேள்விப்பட்ட அவரது மருமகனும் பேரனும் சம்பவ இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று ஓட்டோவுக்கு அருகில் அதனை நிறுத்தி விட்டு சடலத்தைப் பார்க்கச் சென்றனர் என்றும் -

அப்போது அந்த ஓட்டோ நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் குண்டு ஒன்று வெடித்தது என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கொலையுண்டவரின் பேரனான விஜயராசா அனிஸ்டன் (வயது 11) என்பவர் குண்டுவெடித்ததில் காலில் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1)

# அமைச்சர்களின் இருக்கைகள் பக்கம் திடீரென எழுந்த 'கெமிக்கல்' நாற்றம்

## நாடாளுமன்று உடன் ஒத்திவைப்பு; தேடுதலில் ஒருவகைத் தூள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக்.5

நாடாளுமன்றத்தில் திடீரென இரசாயனப் பொருள்களின் ('கெமிக்கல்') நாற்றம் வீசியதாகக் கூறப்பட்டதை அடுத்து நேற்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் சற்றுநேரம் ஒத்தி வைக்கப்பட்டன. பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் உடனடியாக விரைந்து வந்து அமைச்சர்கள் அமரும் முன்வரிசை ஆசனங்களைத் துருவித் துருவிச் சோதனை செய்தனர்.

சோதனை நடத்திய பொலிஸாரும், அதிரடிப்படையினரும் அந்த ஆசனங்களின் கீழும், மேசைகளுக்குள் இருந்தும் தூள் போன்ற பொருளை எடுத்தனர்.

இந்தப் பரபரப்பின் மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்தது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடிய போது, ஜே.வி.பியின் எம்.பி. அநுரகுமார திஸநாயக்க இலங்கையில் கனியவள ஆய்வு தொடர்பாக நோர்வேயுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் பற்றிய ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது 10.45 மணியளவில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி சபையில் ஒரு வகையான 'கெமிக்கல்' நாற்றம் வீசுவதாகக் கூறினார்.

அது பற்றி சோதனை நடத்துவதற்காக 10 நிமிடங்கள் சபை நடவடிக்கைகளைத் தாம் ஒத்திவைக்கிறார் என சபாநாயகர் அறிவித்தார்.

அதனையடுத்து, பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் சபைக்குள் வரவழைக்கப்பட்டு, சோதனை மேற்கொள்ளப்பட்டது. 'கெமிக்கல்' நாற்றம் முன்வரிசையில் அமைச்சர்கள் அமரும் ஆசனப் பக்கத்திலிருந்து தான் வருவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவ்வாசனங்களின் கீழ் சோதனை நடத்தப்பட்டது.

ஆசனங்களுக்கு முன்பாகவுள்ள மேசைகளின் மீது இருந்த அமைச்சர்களின் புத்தகங்கள், ஆவணங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாகத் துருவித் துருவிச் சோதனை செய்யப்பட்டன.

அவ்வாசனங்களின் கீழ் இருந்து தூள் போன்ற பொருள்களைப் பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

சபையைத் தொடர்ந்து நடத்த முடியும் எனத் தெரிவித்துப் பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு உத்தரவாதமளித்தனர்.

இதன் காரணமாக சபை நடவடிக்கைகள் - சுமார் 35 நிமிடங்கள் தாமதித்து முற்பகல் 11.20 மணியளவில் மீண்டும் தொடங்கின.

இவ்விவகாரத்தால் சபையில் ஒரு வகையான பரபரப்பும், பீதியும் நிலவின.

இத்தனை பரபரப்புக்கும், பீதிக்கும் மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையின் மத்தியில் அமைதியாக அமர்ந்திருந்து தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை இடைவிடாமல் தொடர்ந்தனர். (உ)

# வெள்ளவத்தை கடற்கரையோரம் சக்திவாய்ந்த 'கிளைமோர் மீட்பு!

கொழும்பு, ஒக்.5

கொழும்பு வெள்ளவத்தை சாலிமண்ட் வீதியை ஒட்டி, கடற்கரையோரம் சுமார் 15 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் ஒன்றை நேற்றுப் பொலிஸார் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றையடுத்தே அந்த இடத்துக்கு விரைந்து இந்த சக்திவாய்ந்த குண்டைத் தாங்கள் மீட்டனர் எனப் பொலிஸார் கூறினார்கள்.

இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரை அழைத்து இக்கிளைமோர் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதுகுறித்து அவர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததும் அங்கு விரைந்த பொலிஸார் குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினரை அழைத்து குண்டை செயலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தக் கிளைமோர்க்குண்டு வெடித்திருந்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கும் என்று பொலிஸார் தெரிவித்தனர். குண்டு மீட்கப்பட்டதையடுத்து அப்பிரதேசத்தைப் படையினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றி வளைத்தனர். அங்கு பாரிய தேடுதல் நடத்தப்பட்டது. (த)

# புதிய பொலிஸ்மா அதிபராக விக்டர் பெரேரா நியமனம்



கொழும்பு, ஒக்.5

சிரேஷ்ட பொலிஸ்மா அதிகாரியான விக்டர் பெரேரா இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபரான சந்திரா பெர்னாண்டோ எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுக்கொள்கின்றார். அவரது இடத்துக்கே விக்டர் பெரேரா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் குழு, பிரதி பொலிஸ்மா அதிபர்களின் சேவை மூப்பு ஒழுங்கைச் சீர்செய்யும்படி வழங்கிய பணிப்புரைக்கு அமைய அந்தப் பட்டியல் ஒழுங்கமைக்கப்பட்டது என்றும் - அதனடிப்படையில் சேவை மூப்பின் முன்நிலையைப் பெற்ற விக்டர் பெரேரா இப்போது அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். (உ)

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# உலகுக்கு முன்மாதிரியாகும் ஐரோப்பிய ஐக்கியம்

உலகின் மதிப்பு மிகுந்த - மனித உரிமை ஆர்வலரான- மார்ட்டின் லூதர் கிங், உலகில் சேர்ந்து வாழும் முறை தொடர்பாக உரைத்த ஒரு வழிகாட்டல் இன்றைய நோக்கில் இலங்கைக்கு மிகப் பொருத்தமானது.

''உலகில் ஒன்று சேர்ந்து சகோதரர்களாக வாழப் பழகாதவர்கள் எல்லோரும் முட்டாள்களாக ஒன்று சேர்ந்து அழிவார்கள்'' - என்பதுதான் மார்ட்டின் லூதர் கிங்கின் அந்த மதிப்பார்ந்த வாசகமாகும்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஜேர்மன் தேசிய தினத்தையொட்டி - கிழக்கு ஜேர்மன், மேற்கு ஜேர்மன் இணைப்பின் 16 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி - நடைபெற்ற நிகழ்வில் பிரதான உரை நிகழ்த்திய கொழும்பிற்கான ஜேர்மன் தூதுவர் ஜர்கன் வேர்த் இந்த வழிகாட்டலை மேற்கோள்காட்டியே தமது உரை முழுவதையும் நகர்த்திச் சென்றார். இந்த வழிகாட்டலைக் கைக்கொண்டதால் ஜேர்மனியர்களுக்கு - ஐரோப்பியர்களுக்கு - எவ்வாறு பிரகாசமான எதிர்காலம் கிட்டியது என்பதை விஸ்தாரமாக குறிப்பிட்டாரே தவிர, அந்த வழிகாட்டலை இலங் கையரும் தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தவில்லை. எனினும், அவர் ஆற்றிய உரையின் உள்ளடக்கம் இலங்கையருக்குத் தொப்பி அளவாக வீழ்ந்தது போல அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகாரப் பகிர்வு ஐரோப்பியரின் வெற்றிக்கு எவ்வாறு காலாக அமைந்தது என்ற ஜேர்மன் தூதரின் விளக்கம், இலங்கையருக்கு அவர் இந்தக் கால கட்டத்தில் வழங்கிய ஆழமான அரசியல் உபதேசம் என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

இரண்டு உலகப் போர்களையும் ஒட்டி நீண்ட பல தசாப்த காலம் பேரழிவைக் கண்டது ஐரோப்பா. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்தபோது யுத்தப் பேரழிவின் கோரத்தை இனியும் தாங்க முடியாது என்ற மனிதப் பேரவலத்தின் எல்லையில், யதார்த்தத்தை - மெய்மையை - உணர்ந்த ஐரோப்பா, சாம்பல் மேட்டைப் பசும்புல் வெளியாக - பூத்துக் குலுங்கும் தோட்டமாக - மாற்றும் முக்கிய மறுமலர்ச்சிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டது.

அதன் விளைவே இன்று ஐரோப்பிய ஒன்றியம் என்ற வேறுபட்ட 25 நாடுகளின் ஒன்றுபட்ட கூட்டமைப்பு.

யுத்த களத்தில் மட்டுமே ஒருவரை ஒருவர் எதிர்கொள்ளவும், பொருதவும் பழகியிருந்த ஜேர்மனியரும், பிரெஞ்சுக்காரரும் அதை விடுத்து அமைதிக் களத்தில் நட்புறவோடு கைகோர்த்து சமாதான சகவாழ்வை எவ்வாறு ஒன்றிணைந்து முன்னெடுப்பது என்பதைக் கற்றுக்கொண்டனர்.

தெளிவான நோக்கு, நல்லிணக்கம், விட்டுக் கொடுப்பு, சகிப்புத் தன்மை போன்றவை ஐரோப்பாவில் சமஷ்டி அமைப்பின் கீழ் வெற்றிகரமான அதிகாரப் பகிர்வுக்கு நல்வழிகாட்டியாகின என்று விளம்புகின்றார் ஜேர்மன் தூதுவர்.

இரண்டாம் உலகப் போரோடு முடிவுக்கு வந்த - ஐரோப்பியரிடையேயான - குரோதமும், பகையுறவும், விரோதமும் இன்று பரந்த ஐரோப்பா என்ற குடையின் கீழ் பல்வேறு தேசங்களையும் ஐக்கியப் பட வைத்து, உலகில் பெரும் சக்தியாக ஒன்றுபட்டு அவற்றை எழுந்து நிற்க வைத்திருக்கின்றது.

கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி என்று வேறுபட்ட - ஒன்றுக் கொன்று முரண்பட்ட - சித்தாந்தங்களிலும், கொள்கைக் கோட்பாடுகளிலும் பிளவுபட்ட ஜேர்மனி, இன்று விசால நோக்கு, பரஸ்பரப் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை போன்ற மேலான வழித் தடங்களின் வழியே ஐக்கியப்பட்டு முழு உலகுக்கும் முன்னுதாரணமாகி நிற்கின்றது.

இன்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இருபத்தைந்தும் விழுமியங்கள், வாழ்க்கை முறை, பரஸ்பர மதிப்புணர்வு ஆகியவற்றைத் தமக்குள் பகிர்ந்து வாழ்க்கை இலக்கை வெற்றிகரமாக எட்டியுள்ளன என்று பெருமிதத்துடன் கூறுகின்றார் ஜேர்மன் தூதுவர்.

''நாங்கள் தனித்தனி நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான். எம்மை எது பிரித்து வைத்திருக்கிறது? வேறுபட்ட மொழிகளா? வேறுபட்ட மதங்களா? வேறுபட்ட கலாசாரமா? வேறுபட்ட இன வேரோடல்களா? அவை எவையும் இல்லை. பன்மைத்துவத்துக்குள் தனித்துவம் பேணும் - மதிக்கும் - பண்புதான் எம்மை இன்று ஐக்கியப்பட வைத்து உயர்த்தி வைத்திருக்கின்றது.'' - என்று விளக்குகின்றார் அவர்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் குண்டு வீச்சுக்களால் அழிந்து போன நகரங்களுக்கு மத்தியில் இருந்து பிறந்த புதிய சிந்தனை - விசால நோக்கம் - இன்று பெரும் விருட்சமாக வலுவுள்ள ஐரோப்பாவைக் கட்டி எழுப்பியிருக்கின்றது.

அதனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் 45 கோடி மக்கள் சுபீட்ச மாக வாழும் பேறு கிட்டியிருப்பதை ஜேர்மன் தூதுவர் சுட்டிக் காட்டுகின்றார்.

அங்கு பதுங்கு குழிகளுக்குள்ளும், பேரவலத்துக்குள்ளும் வாழ்ந்த பாட்டன்மாரின் காலம், கனவுலக மாயையாகி விட்டது. அமைதிப் பூங்காவில் சுபீட்ச வாழ்வு என்பது எதிர்கால சந்ததிக்கான சொர்க்கமாகக் காத்திருக்கின்றது.

போரழிவிலிருந்தும், பேரழிவிலிருந்தும் இலங்கைத் தீவும் மீண்டு, அத்தகைய நல்வாழ்வு இங்கும் நீடிக்க வேண்டுமானால் எமக்கு அவசியமானது என்ன?

இன மேலாதிக்கம், பேரினவாதப் போக்கு, அடக்குமுறை, இன ஒடுக்கல் போன்றவற்றைக் கைவிட்டு சிறுபான்மையினருடன் கைகோர்த்து, அவர்களை மதித்து, அவர்களுக்கு உரியதை விட்டுக் கொடுப்போடு வழங்கி, சகிப்புத் தன்மையைப் பின்பற்றி, பாதிப்புற்றோருக்கு நியாயம் வழங்கும் மனப்பாங்கு அதிகாரப் பக்கத்திலிருந்து வரவேண்டும்.

அத்தகைய மாற்றம், அடக்க முயலும் தரப்பில் ஏற்படுமானால், ஐரோப்பாவுக்குத் தேவைப்பட்டது போல அறுபது ஆண்டுகள் அல்ல, இங்கு நிலைமை மாற ஆறு மாதங்களே போதும்.

ஆனால், அந்த மனமாற்றம் அதற்குரிய தரப்புகளிடம் வருவதற்கு வாய்ப்பே அடியோடு இல்லை என்பதுதான் இலங்கை விடயத்தில் மன வேதனைக்குரிய அம்சமாகும்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று

வடமராட்சி, ஒக்5

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.15 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவார்.

நாளை வெள்ளிக்கிழமை கடல் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. இத்திருவிழாவில் கடலுக்குச் செல்வதற்கு 50 பேருக்கு மட்டுமே படைத் தரப்பினால் அனுமதி வழங்கப்பட்டுள் ளது. ஏனையோர் கடற்கரைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் தீர்த்தத் திருவிழாவன்று பிற்பகல் ஒரு மணியளவில் சக்கரம், விநாயகர், லக்ஷ்சுமி ஆகிய விக்கிரகங்கள் எழுந்தருளி உள்வீதி உலா வந்து அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேகம் சங்கற்பம் என்பன நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து ஆலய பிரதம குருக்கள் உபயகாரர் தர்ம கர்த்தாசபை உறுப்பினர்கள் 15 பேர் மற்றும் தொண்டர்கள் 35 பேரும் கடற்கரைக்குச் செல்வர்.

இம்முறை அனுமார் விக்கிரகம் மட்டுமே கடற்கரைக்கு கொண்டுசெல்லப் படவுள்ளதாகவும் சக்கரம், விநாயகர் லக்ஷ்சுமி விக்கிரகங்கள் எடுத்துச்செல்லப் படமாட்டாது என்றும் கூறப்பட்டுள்ளது.

கடலுக்குச் செல்பவர்கள் எடுத்து வரும் தீர்த்தம் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. தீர்த்தம் எடுத்துவருவதற்காக ஒரு டிராக்டரும் கடற்கரைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இன்றைய அசாதாரண சூழ்நிலை போன்று 1986ஆம் ஆண்டும் ஓர் நிலைமை இருந்தது. அவ்வாண்டும் இது போன்றே கடல் தீர்த்தம் இடம்பெற்றது. 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் அவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேர், கடல் தீர்த்தைத் தொடர்ந்து நாளைமறுதினம் சனிக்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.

(ப-173 -203)

# கூட்டுறவு சங்கக்கிளை திறக்கக் கோரிக்கை

நல்லூர், ஒக்.5

நல்லூர், நாயன்மார்கட்டுப்பகுதியில் நீர்வேலி ப. நோ். கூ. சங்கத்தின் கிளை விற்பனை நிலையம் ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு நாயன்மார்கட்டு பாரதி ச.ச.நிலையம் கோப்பாய் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பாரதிமன்ற சனசமூக நிலையத் தலைவர் இ.மயில்வாகனம் கோப்பாய் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் -

இப் பகுதி மக்கள் மூன்றரை கிலோமீற்றர் தூரம் நடந்துசென்றே தமக்குரிய அத்தியாவசிய பொருள்களையும் நிவாரணங்களையும் கட்டைப்பிராய் 20 ஆம் இலக்கக் கிளையில்பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் இதற்கான ஒரு நாளைச் செலவிட வேண்டியுள்ளதாகவும் பொதுமக்களின் வசதி கருதி இப் பகுதியில் புதிய கிளை ஒன்றைத் திறக்க உதவுமாறும் கோரப்பட்டுள்ளது. (ப-111)

# எழுவைதீவு வைத்தியநிலையம் வெள்ளிக்கிழமைகளில் இயங்கும்

நல்லூர், ஒக்.5

எழுவைதீவு வைத்திய நிலையம் வாரத்தில் வெள்ளிக்கிழமை ஒருநாள் மட்டும் வைத்திய சேவைக்காக இயங்கத் தொடங்கியுள்ளது.

பல காலமாக மூட்ப்பட்டிருந்த இந்த வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

நயினாதீவு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.சண்முகரத்தினம் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் சமுத்திராதேவி அம்புலன்ஸ் படகின் மூலம் எழுவை தீவுக்குச் சென்று நோயாளர்களைப் பார்வையிடுகின்றார். தாய் சேய் நிலையமும் அங்கு மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. (ப-111)

# யாழ்.பிரதான வீதி வீடுகளில் சுற்றிவளைத்துச் சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நகரை அண்டிய பகுதிகளை சுற்றிவளைத்து வீடுவீடாகச் சென்று தேடும் நடவடிக்கைகள் அண்மைய நாள்களில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முதலாம், இரண்டாம், மூன்றாம், நாலாம், ஐந்தாம் குறுக்கு வீதிகளில் உள்ள வீடுகளும் மற்றும் சப்பல் வீதி, வேம்படி வீதி, மாட்டீன் வீதி ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இந்தத் தேடுதலில் ஆண், பெண் பொலிஸாரும் படைத்தரப்பினருடன் ஈடுபடுவதுடன் ஆள் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு குடும்ப விவரமும் பதிவு செய்யப்படுகிறது.

ஆண்கள் இல்லாத வீடுகளில் பெண்கள் இருந்தால் அல்லது அந்த நேரத்தில் ஆண்கள் அலுவல் காரணமாக வெளியில் சென்று இருந்தால் அயல் வீடுகளில் உள்ள ஆண்களை அழைத்துச் சென்று அவர்கள் முன்னிலையில் தேடுதல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# உணவுப் பண்டங்களை நியாய விலையில் விற்பனை செய்யுமாறு கோரிக்கை

யாழ்.நகரில் இயங்கும் உணவகங்கள் மற்றும் குளிர்பான நிலையங்களில் உணவுப் பண்டங்களை நியாய விலைக்கு விற்பனை செய்யுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

அரச அதிபரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் உணவகங்கள் மற்றும் குளிர்பான நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்றும் -

அந்தப் பொருள்களில் உற்பத்தி செய்யப்படும் தேநீர் மற்றும் உணவுப் பண்டங்களை நியாய விலையில் விற்கும்படியும் - வணிகர் கழகம் கோரியுள்ளது. (1)

# ஊழியர்கள் பெற்றோல் பெற விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.5

எரிபொருள் பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பெற்றோலைக் கொள்வனவு செய்ய இன்று விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் இயங்கும் ஜெயதேவா, குகன் எரிபொருள் நிலையங்களில் காலை 8 மணிமுதல் முற்பகல் 10 மணிவரையும் -

நேற்று பெற்றோல் வழங்கப்பட்ட ஏனைய எரிபொருள் நிலையங்களில் காலை 9 மணிமுதல் 10 மணிவரையும் - இவர்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

# குருநகர் மகப்பேற்று மனையை மீள இயக்க நடவடிக்கை

## சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.5

குருநகர் அரசினர் வைத்தியசாலையில் இதுவரை செயற்படாமலிருந்த மகப்பேற்று மனையை ஆரம்பிக்க யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிறுவனத் தலைவர்களின் மாதாந்த கலந்துரையாடலில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மருத்துவமனைக்கு மருத்துவமாது ஒருவரை தாம் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் -

குருநகர் பொதுமக்கள் இங்கு மகப்பேற்று விடுதியை திறக்குமாறு தமக்கு தொடர்ந்து கோரி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-51)

# நிவாரணம் குறித்து இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.5

தற்சமயம் மேற்கொள்ளப்படும் நிவாரண விநியோகம் தொடர்பான அவசர கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

சங்கக்கிளை முகாமையாளர்கள் கிளைகளின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# சிறுவனை பாம்பு தீண்டியது

சாவகச்சேரி, ஒக்.5

தந்தையுடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த சிறுவனைப் பாம்பு தீண்டியது. இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கச்சாய்ப் பகுதியில் இடம்பெற்றது. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஐந்தாம் தர மாணவனான சத்தியமூர்த்தி சுவர்ணன் (வயது - 11) என்ற சிறுவனே பாம்புக் கடிக்கு இலக்கானவராவார்.

இவர் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-31)

# அவசர தேவைகளுக்கு மட்டுமே அம்புலன்ஸ் சேவையை நாடுங்கள்

## பரு. ஆதார வைத்தியசாலையினர் வேண்டுகோள்

உடுப்பிட்டி,ஒக்.5

அத்தியாவசிய, அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு நோயாளர்கள் அம்புலன்ஸ் சேவையை அழைக்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஊரடங்கு, படையினரின் கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு மக்களின் நலனுக்காக அம்புலன்ஸ் சேவைகள் இரவு நேரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இச்சேவைகளில் ஈடுபடும்போது பாதுகாப்பு படையினரின் நடைமுறைகளுக்கு அமையவே சேவைகளை மேற்கொள்ளவேண்டும்.

எனவே மக்கள் தேவையற்ற வகையில் அம்புலன்ஸ் அழைப்புகளைச் செய்யாது அவசர தேவைகளுக்கு மட்டும் அம்புலன்ஸை அழைக்கவேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(203-155)

# கிணறுகள் வற்றுகின்றன

வடமராட்சியில் பல்வேறு இடங்களிலும் குடிதண்ணீர் கிணறுகள் வற்றியுள்ளதால் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. பல மாதங்களாக இருந்து வரும் கடும் வரட்சியினால் குடிதண்ணீர் கிணறுகள் வற்றியுள்ளதாக அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (173)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பன்னாலை, சேர் கனகசபை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - தெல்லிப்பழை ஆசிரியர்

### செல்வி காயத்ரி இராஜசூரியர்

அவர்கள் கலாசார அலுவல்கள் தேசிய மரவுரிமை அமைச்சு தேசிய மட்டத்தில் நடத்திய அரச ஊழியர்களின் ஆக்கத் திறன்களுக்கிடையிலான போட்டி 2006 இல் கவிதைப் பிரிவில் முதலாம் இடம் பெற்று அதற்கான விருதினை 17.09.2006 ஆம் திகதி பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார். இவ் ஆசிரியரை உலக ஆசிரியதின நாளில் பாராட்டி வாழ்த்தி எதிர்காலத்தில் மேலும் சிறப்படைய மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார அலுவலர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(54036)

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



மலர்வு 12 - 07 - 1978 | உதிர்வு 04 - 09 - 2006

### கந்தசாமி நகுலநாதன்

*இலக்கணவத்தை ஊரினிலே!*
*நகுலன் என்னும் பெயரினிலே!*
*வளமுடன் நீ வாழ்கையிலே!*
*இருபத்தெட்டு வயதினிலே!*
*திடீர் என மடிந்து விட்டாய்!*
*எப்போதும் உன் நினைவால்*
*வாடுகின்றோம் நாம் இங்கே.*

குறிப்பு:
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு 08.10.2006 அன்று வீட்டில் நடைபெறும் கிரியை ிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலக்கணவத்தை, உடுப்பிட்டி. (54180) தகவல்: குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

*இன்றே நீ என்னோடு வான் வீட்டில்இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்கின்றேன். (லூக்23:43)*

தாயின் மடியில் 22 - 09 - 1943



இறைவன் திருவடியில் 05 - 09 - 2006

### அமரர் S.M.மரியநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

எம் இதயத்தின் ஆனந்தமே - பப்பா
மோசஸ் குடும்பத்தின் நல் முத்தாய் வந்துதித்து
பத்திரிசியார் குடும்பத்தின் கல்வியிலும் பண்பிலும் வளர்ந்து

பரிமளமெனும் பரிசுத்த மலருடன்
காதல் வானில் கைகூடி
பெற்றீர் நற்கனிகள் ஆறை(6)
பெற்றவளைப் பாதியிலே இறைவன் அழைத்திடவே
எம் துயர் மறந்திட பற்றுடனே வளர்த்தீர்.

பாசமிகு பப்பாவாய் அரவணைக்கும் அன்னையாய்
கல்வி அறிவூட்டும் நல் ஆசானாய்
பார்போற்றும் பணியாளனாய்
யாவருக்கும் உதவும் சேவகனாய்
பசியறிந்து பகிர்ந்தளிக்கும் வள்ளலாய்
பகை பாராட்டா நற்பண்பாளனாய்
கவர்ந்தீர் பல இதயங்களை

உம் அன்புச் செல்வங்கள் -நாம்
நலமோடு சுகமாய் வாழ்த்திடவே
நேசமுடன் பணிவிடை புரிந்தெம்மை வளர்த்து
பிரியமுடன் நாம் செய்யும் பணிவிடையைப்
பார்த்து மனம் நெகிழ்ந்து
போதும் என் செல்வங்களே
போகவிடை தாருங்களே
பார்க்க மனம் துடிக்கிறதே - என்றெண்ணிப்
படைத்தவன் பாதங்களில்
பணிசெய்யச் சென்றீரோ
பாரும் பப்பா பதறுகின்றோம்
மீண்டும் உம்மைப் பார்ப்போமா? - என்று
பாசத்துடன் ஏங்குகின்றோம்.

*எம் தந்தையின் பிரிவால் எமக்கு ஆறுதல் வார்த்தைகளை நேரடியாகவும் தொலைபேசி வழியாகவும் தந்தி மூலமும் தெரிவித்து எம் துயரில் பங்குகொண்டு பப்பாவின் ஆன்ம சாந்திக்காகச் செபித்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் இதய நன்றிகள்.*

62,B 1/1, கவுடான றோட்,
தெஹிவளை.
தொ.பே.: 0112 735915,
0776405849 (54115)

**-பிள்ளைகள்.**

## ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.5

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும்.

## கந்தபுராணப் படிப்பு

தென்மராட்சி,ஒக்.5

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுத ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

ஒரு மண்டல காலத்திற்கு படிப்பு நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளி ஆசிரியர் தினம்

சுழிபுரம்,ஒக்.5

வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்தும் சங்கானைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியதின விழா இன்று வியாழக்கிழமை பகல் ஒரு மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்கு சமாஜத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தே.பாபுவும் சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்குப் பிரதேச சபை செயலாளர் க.இராசதுரை, மானிப்பாய் வைத்திய அதிகாரி எஸ். சிவகணேஷ், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கிருபாகரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் வ.கோமளநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர் (1-28)

## மரவள்ளிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

கோப்பாய், ஒக்.5

கோப்பாய், நீர்வேலிப் பிரதேச விவசாயிகள் மரவள்ளி பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பனம்பழங்களைச் சேகரித்து பாத்தி இடுவதிலும் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். (203-72)

## இடம்பெயர்ந்தோருக்கு அடிப்படை வசதி

கல்வியங்காடு, ஒக்.5

தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கரணவாய் மணியம்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 27 குடும்பங்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் இந்த உதவிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (203-79)

## தபால் அதிபராக புதியவர் நியமனம்

நல்லூர், ஒக்.5

யாழ்.பிரதம தபால் அதிபருக்கு மாவட்ட தபால் அத்தியட்சகராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பிரதம தபாலதிபர் எஸ்.ஞானலிங்கமே பதவி உயர்வு பெற்றவராவார்.

இவர் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வவுனியா பிரதம தபாலதிபராக பருத்தித்துறைத் தபாலதிபர் அ.துரைசிங்கம் நியமனம் பெற்றுள்ளார். (203-111)

## காலபோக நெற்செய்கை தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக்.05

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட நாள் இடைவெளிக்குப் பின்னர் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் சகல பகுதிகளிலும் உள்ள வயல் நிலங்களைப் பண்படுத்தி பயிரிட ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை,

விவசாயிகளில் பலபேர் விதைநெல் இன்றிப் பெரும் கஷ்டம் அடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (203-31)

அமெரிக்கவில் நிரந்தர குடியுரிமை
DV - 2008 LOTTERY VISA
விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளலாம்.
முடிவுதிகதி - 03.12.2006
* 2006 A/L பரீட்சை பெறுபேறுகளை பார்வையிடலாம்.
தொ.பே.: 222 3536
(54150) Arul Communication
Brown Road, Jaffna.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04 - 09 - 1947



விண்ணில் 23 - 09 - 1999

### அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

திதி: திரயோதசி
05.10.2006

*எங்கள் குடும்பத்தின் விளக்கு*
*அணைந்தாலும் எங்கள்*
*நெஞ்சை விட்டகலாது*
*உம் நினைவுகள்.....*

எருவன், கொடிகாமம். (54123)

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 - 01 - 1977



விண்ணில் 07 - 10 - 2003

### மாசிலாமணி ஸ்ரீகாந்தன்(காந்தன்)

திதி: திரயோதசி

*காந்தா!*
*மூன்றாண்டு ஓடி மறைந்ததுவோ*
*இன்னும் எம் துயரங்கள் தீரவில்லை*
*ஆற நினைக்கின்றோம் எம்மால் முடியவில்லை*
*உமது சிரித்த முகந்தான் தெரிகிறது*
*உமது ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

மீசாலை. (54103) தகவல்: குடும்பத்தினர்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 23 - 03 -1923 | விண்ணில் 14 - 10 -1997

### திருமதி நாகலிங்கம் கண்மணி

*(சுதுமலையைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவர்)*

திதி: 05.10.2006

*தந்தையினை நாம் இழந்து தவித்த வேளை - எமை*
*எந்தவித தளர்வுமின்றி தாங்கிநின்று*
*சிந்தையினால் உறுதியோடு சிராய் வாழச்*
*சிறந்த கல்வி பெற வைத்து சிறப்புங்கண்டு*
*வந்தவினை வலியாலே அணைந்த எங்கள்*
*அன்னையென நாம் பெற என்ன தவம் செய்தோம்*
*எந்தையினை தாழின் கீழ் இருந்தவாறு*
*எம் தாயே! நீ பெறுவாய் என்றும் சாந்தி!*

நா.தெட்சணாமூர்த்தி
145/3, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 222 8169 (54136)

மகள், பேரன்மார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்வசீலன் (உரிமையாளர் -அலோமாஸ், சுன்னாகம்)



இராமலிங்கம் வீதி, உடுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வசீலன் நேற்று (04.10.2006) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- லூசி தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற பிரான்ஸிஸ் - நேசமலர் தம்பதியரின் மருமகனும் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் அலோமா, காலஞ்சென்ற அகிலன் மற்றும் அஷான் (தரம் 11- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநாயகி, செல்வநாயகம் (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்), செல்வறஞ்சி (கனடா), காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் செல்வறஞ்சன் ஆகியோரின் சகோதரரும் வி.கே.ஜெயரட்ணத்தின் பெறாமகனும் பாலசுப்பிரமணியம் (ஆசிரியர், யா/ மத்திய கல்லூரி), மனோகரன் (குவைத்), காலஞ் சென்ற வசந்தமனோகரி மற்றும் கிருபாகரன், தயாபரன், அமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கிருஸ்ணமூர்த்தியின் அன்புச் சகலனும் தேவதர்சினி, அனுஷீலா, ராகவேந்தன், கரன், செல்வி, ஆரணியா, ஜிதுஸ்மன், திவித்தா, கோபிதா, அனோஜிகா, அருணியா ஆகியோரின் சிறிய தந்தையும் ஜீவராஜா, கிரிதேவா, பிரகாஷ், பிரபா, அலிஸ்ரன், அனோஷன், தஷான், அஷாணி, தர்ஷிகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.10.2006) வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம். (54150)

தகவல்: குடும்பத்தினர்.



கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி ஏ-9 வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் எரிபொருளுக்குக் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதை அடுத்து பிரதேச செயலகங்களால் மோட்டார் வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகிப்பதற்கென பங்கீட்டு அட்டை வழங்கப்பட்டது. பங்கீட்டு அட்டையைப் பெற்றுக்கொண்ட வாகன உரிமையாளர்களுக்கு நேற்று முதலாவது நாளாக பெற்றோல் வழங்கப்பட்டது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகன உரிமையாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை முதலிருபடங்களிலும் காணலாம். நீண்டநேரம் காத்திருந்த வாகன உரிமையாளர் ஒருவருக்குப் பெற்றோல் வழங்கப்படுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (17)

# பெற்றோல் பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் நேற்று வாகனங்கள்!

நல்லூர், ஓக.4

யாழ்ப்பாணம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று புதன்கிழமை இதற்கென வழங்கப்பட்ட அட்டைகளுக்கு பெற்றோல் முதலாவது நாளாக வழங்கப்பட்டது.

எரிபொருள் விநியோக அட்டை ஒன்றுக்கு 200 ரூபாவுக்குப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

பெற்றோல் விநியோக நிலையங்களில் காலை 6 மணிக்கே மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களுடன் வாகனச் சொந்தக்காரர்கள் வரிசையில் நிற்கக் காணப்பட்டனர்.

காலை 9 மணிக்கே மின்விநியோகம் இடம்பெற்றதால் அரசாங்க ஊழியர்களும் ஏனைய அலுவலர்களும் தமது கடமைக்கு உரிய நேரத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் 9.30 மணிக்குப் பின்னர் அரசாங்க ஊழியர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சில நிலையங்கள் பெற்றோல் விநியோகித்தன.

பெற்றோல் விநியோகத்தைக் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிப்பது வாகன உரிமையாளர்களைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது. மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் அதிகாலை 6 மணிக்கே வரிசையில் வந்து நிற்கிறார்கள். வரிசைகள் மிக நீண்டு செல்வதால் சற்றுப் பிந்தி வருபவர்கள் காலை உணவுமின்றி கடும் வெயிலில் நிற்க வேண்டியுள்ளது என்றும் வாகன உரிமையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ப-111)

## தண்ணீர் இன்மையால் கால்நடைகள் இறக்கின்றன

மண்டைதீவு, ஓக.5

மண்டைதீவுப் பகுதியில் உள்ள ஆடு, மாடு போன்ற கால்நடைகள் அந்தப் பகுதியில் உள்ள நீர் நிலைகள் கடும் வரட்சி காரணமாக வற்றி உலர்ந்து விட்டதால் நீரின்றி இறந்து வருவதாக கூறப்படுகின்றது.

இந்தக் கால்நடைகளைப் பராமரித்து வந்தவர்கள் அண்மைக்கால அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்துள்ளனர். அதனால் இந்தக் கால்நடைகள் பராமரிப்பாரின்றித் திரிவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய வரட்சிக் காலங்களில் பிரதான வீதியில் உயரம் குறைந்த பீப்பாய்களில் நீர்நிரப்பி கால்நடைகளைப் பாதுகாப்புத்தரப்பினர் போஷித்து வந்தனர் என்பதும் தற்போதைய சூழ்நிலையில் அந்த நடைமுறை செயற்படுத்தப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ப-88)

# சட்டவிரோத மது மற்றும் கசிப்பு கைதடிப் பகுதியில் தாராளம்!

கைதடி, ஒக்.05

கைதடிப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை மிகத்தீவிரம் அடைந்திருப்பதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

இச் சட்டவிரோத விற்பனை கைதடிதென் கிழக்கு மற்றும் கைதடி மத்தி ஆகிய பிரிவுகளிலேயே மிகக் கூடுதலாகவும் தாராளமாகவும் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

மேலும் கசிப்பு விற்பனையும் தற்போது இடம்பெறுகின்றது. இக்கசிப்பு தச்சன்தோப்புப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு கைதடிப் பகுதிக்குக் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இச்சட்டவிரோத விற்பனை குடிசைத் தொழிலாகத் தற்போது நடைபெறுவதாகவும், இதனைத் தடுத்து நிறுத்தச் செல்வோர் பயமுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விற்பனையால் அப்பகுதிகளில் சண்டை சச்சரவுகள் நாளாந்தம் இடம்பெறுவதாகவும் இதனை அடியோடு நிறுத்த சம்பந்தப்பட்டோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்படுகின்றது. (ப-75)

# வயதை மறைத்து புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட 93 பேர் விடுவிப்பு

கிளிநொச்சி, ஒக்.05

தங்களின் வயதைக் காட்டிக்கொள்ளாமல் மறைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட 93 பேரை விடுதலை செய்திருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

கடந்த செப்டெம்பர் முதலாம் திகதியன்று 68 பேர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒக்டோபர் முதலாம் திகதி மேலும் 11 பேர் குடும்பத்தினரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

தங்களது வீடுகளுக்குத் திரும்ப மறுத்த 15 இளைஞர்கள் கல்வி வள மையத்திடம் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களை யுனிசெவ் மற்றும் அவர்களது பெற்றோர்கள் வந்து சந்திக்கலாம்.

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 93 பேரினது பெயர்ப்பட்டியல் யுனிசெவ் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன - என்று சமாதான செயலகம்தெரிவித்துள்ளது. (ஐ)

## கணவனைக் காப்பாற்ற முயன்று வாள் வெட்டுக்குள்ளானார் மனைவி

தென்மராட்சி.ஒக்.05

கணவன் வாள் வெட்டுக்கு இலக்காக இருந்தவேளை அவரைக் காப்பாற்றும் பொருட்டு குறுக்கே புகுந்து தடுக்க முயன்ற மனைவி வாள் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் செல்வராணி (வயது 40) என்பவரே காயமடைந்தவராவர்ர். மார்பிலும் கையிலும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப)

# கிராண்ட்பாஸ் குப்பைக் குவியலினுள் அழுகிய சடலத்தின் பாகங்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 05

கொழும்பு - கிராண்ட்பாஸ் சேதுவத்தைப் பிரதேசத்திலுள்ள குப்பைக் குவியலினுள் மர்மமான முறையில் புதைக்கப்பட்டிருந்த சடலம் ஒன்றின் மிகவும் உருக்குலைந்த பாகங்களைப் பொலிஸார் செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளனர். கொழும்பு மேலதிக நீதிவான் அஜித் அனவிரத்னவின் உத்தரவின்பேரிலேயே இச்சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. இச்சடலம் கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி சேதுவத்தை, வெரகொடல்லப் பிரதேசத்தில் காணாமல்போன 31 வயதுடைய இளைஞருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரைக் கைது செய்வதற்கு இரண்டு பொலிஸ் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சடலம் மிகவும் அழுகிய நிலையில் இருப்பதால் எச்சங்கள் சிலவே கிடைத்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எச்சங்கள் மீட்கப்பட்டபோது புதுக்கடை நீதிவான், கொழும்பு சட்டவைத்திய அதிகாரி ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

சடலம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ஐ)

# ஆறு சர்வதேச நிறுவனங்கள் இலங்கையில் செயற்படத் தடை!

## அனர்த்த நிவாரணம் என்ற பெயரில் புலிகளுக்கு உதவினவாம்!

கொழும்பு, ஒக்.04

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் என்ற போர்வையில் புலிகளுக்கு உதவிகளை வழங்கியமை மற்றும் பாதுகாப்பு, சுங்க சட்டதிட்டங்களை மீறிய காரணங்களுக்காக ஆறு அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு தடை விதித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்பை அமைச்சரும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடகப்பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல அறிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

குடிவரவு, குடியகல்வு, பாதுகாப்பு, சுங்க சட்ட திட்டங்களை மீறியதன் காரணமாகவே அரச சார்பற்ற ஆறு நிறுவனங்களை நாம் தடை செய்துள்ளோம். சில நிறுவனங்கள் அரசையும், புலிகள் இயக்கத்தையும் ஒரே அந்தஸ்தில் வைத்துப் பார்த்துச் செயற்பட்டுள்ளன.

மேலும் சில நிறுவனங்கள் ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை புலிகளுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கியுள்ளன. இவ்வாறான பொருட்களைக் கைப்பற்றி சில சந்தேகநபர்களையும் நாம் கைது செய்துள்ளோம். நாட்டின் பாதுகாப்பு கருதியே இந்த ஆறு நிறுவனங்கள் இயங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. - என்று கூறினார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல. (த)

# வடக்கு - கிழக்குக்கு வெளியே உயிரிழப்போரின் குடும்பங்களுக்கும் ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு

கொழும்பு, ஒக். 04

மோதல் நிலைமை காரணமாக வடக்கு-கிழக்கில் மரணிப்பவர்களுக்கு வழங்கப்படுவது போன்று உட்பட நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் மரணிப்பவர்களின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடாக தலா ஒரு லட்சம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இம்மோதல் நிலைமை காரணமாக வடமாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் மரணித்தால் அவரது குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படுகிறது. ஆனால், வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் இம்மோதல் நிலைமை காரணமாக மரணிக்கும் ஒருவரின் குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபாய்மட்டுமே நஷ்டஈடாக வழங்கப்படுகிறது. எதற்காக இந்தப் பாகுபாடு என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸநாயக்க நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கு முகமா கவே அமைச்சர் ரிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

ரிசாத்பதியுதீன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்போது வடக்கின் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது மோதல் நிலைமைகள் காரணமாக வடக்கில் மரணமாகும் ஒருவரின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனக்கோரி அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து அமைச்சரவையின் அனுமதியையும் பெற்றுக் கொண்டார். இதன்படி அன்றுமுதல் இன்று வரை வடக்கில் மரணமாகும் ஒருவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுவருகிறது. ஆனால், வடக்குத் தவிர்ந்த கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாவட்டங்களில் உள்ளவர்கள் வடக்கு - கிழக்கு மோதல் நிலைமையால் உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக 50 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது.

இந்த நிலைமையை இல்லாதொழித்து வடக்கில் வழங்கப்படுவதுபோல நாட்டின் ஏனைய மாவட்டங்களில் மரணிப்பவர்களின் குடும்பத்தினருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் எனக் கோரி நான் அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளேன் - என்றார். அப்படியென்றால் 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு மீதி 50ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுப்பீர்களா என அநுரகுமாரதிஸ்ஸ மேலும் கேள்வி எழுப்பியபோது எதிர்காலத்தில் அவ்வாறு செய்யவென அமைச்சரவையின் அனுமதியைக் கோரி அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளேன என ரிஷாத் பதியுதீன் மேலும் கூறினார். (ஐ)

## மோட்டார் சைக்கிள் நல்லூரில் அபகரிப்பு

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற கணவனையும் மனைவியையும் அச்சுறுத்தி விட்டு மோட்டார் சைக்கிளை அபகரித்து சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாது:-

நல்லூர் சட்டநாதர் வீதியில் பிற்பகல் 4 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கணவனையும் மனைவியையும் வழிமறித்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் மூவர் தமது கைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திவிட்டு அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை அபகரித்துக்கொண்டு சென்றுள்ளனர். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-79)

## URUMPIRAI KIDS' PARK

## உரும்பிராய் கிட்ஸ் பார்க்

01.10.2006 உதயனில் பக்கம் 04 இல் பிரசுரமான விளம்பரம் சார்பாக

**முன்பள்ளி ஆசிரியை தேவைக்கு இளைப்பாறிய ஆங்கில ஆசிரியைகளும் நல்ல ஆங்கில அறிவுள்ள யுவதிகளும் விண்ணப்பிக்கலாம்.**

**முடிவு திகதி: 15.10.2006**

## முதலாம் வருட குருபூசை வைபவம்



*சீவன் முத்தி எய்திய தவத்திரு*

**ஸ்ரீ. சர்வானந்தம் சுவாமிகளின்**

*(ஆறுமுகம் சுவாமிகள்)*

ஒருவருட சுப்ரதீப குருபீட குருபூசை வைபவம்

இன்று [05.10.2006] வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடிகாமத்தில் சுவாமிகளின் குருபீடத்தில் நடைபெறவுள்ளது. யுத்தகால சூழ் நிலையில் அடியார்கள், அன்பர்கள் சமுகமளிக்க முடியாத காரணத்தினால் சுவாமிகளின் இந்த நன்நாளை நினைவு கூர்ந்து, ஆனந்தமடைந்து சுவாமிகளின் தவப்பேற்றை யாவரும் பெறவேண்டும் என்று எங்குமாகி ஒருவனாய் நிறைந்துள்ள பகவானை வேண்டிக் கொள்கின்றோம்.

*ஐயனார் வீதி,*
*கொடிகாமம்.*

சுவாமிகளின் மாணாக்கரும்,
இல்லறத்துறவோரும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

*மலர்வு* 06 . 07 . 1927



*உதிர்வு* 05 . 09 . 2006

### அமரர் குமாரசாமி கந்தசாமி (பத்தர்)

**கடந்த 05.09.2006 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (05.10.2006) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*க.சச்சிதானந்தன்*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*
*தொ.பே. 060221 2904*

**- குடும்பத்தினர்.**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

கண்மகிழ 25 - 07 - 1957



கண்நெகிழ 29 - 09 - 2001

அமரர்

### இளையதம்பி கணேசலிங்கம் (தேவா)

**(கிறேசர் உரிமையாளர்)**
**திதி:05-10-2006**

ஆண்டு ஐந்து நீங்கினாலும்
உம் நீண்ட துயில் நீங்கிடுமா
எம் வேதனை தான் தீர்ந்திடுமோ
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பொற்கொல்லர் வீதி,**
**மட்டுவில்கிழக்கு,**
**சாவகச்சேரி.**

என்றும் நீங்கா நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஒக்.5

மாணவர்கள், தொழில் முயற்சியாளர்கள், இளைஞர்கள், பெரியோர் ஆகியோர் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலான சொற்பொழிவு நோன்மதி தினமான நாளை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் மேற்கு பாக்யா இசைப் பயிலகத்தில் இடம் பெறவுள்ளது.

மாதந்தோறும் நோன்மதி தினத்தில் இச் சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது.(1)

### மின்சாரசபை ஊழியர் தாக்கப்பட்டார்

அனலைதீவு பகுதியில் கடமையாற்றும் மின்சார சபை ஊழியர் ஒருவர் நேற்றுமுன் தினமிரவு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவில் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப் பட்டுவருவது வழக்கம். சம்பவ தினமிரவு 11 மணியளவில் மின்சார விநியோகத்தை நிறுத்திவிட்டு சம்பந்தப்பட்ட ஊழியர் நித்திரைக்குச் சென்றுவிட்டார் என்றும் -

குறித்த அலுவலர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்ற இனந்தெரியாதோர் ஊழியரை பலமாக தாக்கிவிட்டு தப்பிவிட்டனர் என்றும் - கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மின்சாரசபையின் யாழ். அலுவலகத்திலும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கடையிற் சுவாமிகள் குருபூசை இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.5

அருட்திரு கடையிற் சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்று வியாழக்கிழமை வண்ணை சிவன் கோயிலில் நடைபெறவுள்ளது.

சுவாமிகள் சமாதியடைந்து 116 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு விசேட பூசைகளும் அன்னதானமும் இடம்பெறும்.

மண்டைதீவில் சுவாமிகள் வாழ்ந்த இல்லத்திலும் இன்று நண்பகல் 12 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள், அன்னதானம் ஆகியன இடம்பெறவிருக்கின்றன. (1-202)

## பாண் தாராளம்

வடமராட்சி,ஒக்.5

வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போது பாண் தாராளமாக எவ்வேளையிலும் கிடைத்து வருகிறது.

பேக்கரிகளில் மாத்திரமன்றி உள்ளூர் சிறு கடைகளிலும் தேவையான பாணைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. (ப-173)

## மரண அறிவித்தல்

### வேதநாயகம் அற்புதஜெயம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட **வேதநாயகம் அற்புதஜெயம்** 2006.10.02ஆம் திகதியன்று காலமானார்.

அன்னார் றெஜினா பூபதியின் அன்புக் கணவரும், மித்திரன், சித்துரஞ்சன், Dr. தேவதர்சன் ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற அற்புதமணி, காலஞ்சென்ற அற்புராஜன், காலஞ்சென்ற அற்புதநாதன், அற்புதமலர், அற்புதராணி ஆகியோரின் சகோதரரும், ஜெயா, ரெபேக்கா ஆகியோரின் மாமனாரும், தயோமி, டிலான், டிலினி ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05.10.2006 பிற்பகல் 3.30 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஜாவத்த பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: Dr. DEVAN**
**47/2, Fussels Lane, Wellawatha.**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையிலும், தெகிவளையிலும் 3 படுக்கையறைகள், Hall, Kitchen, Bathroom உடன் கூடியவீடுகள் வாடகைக்குண்டு.

தொடர்பு:- Pragash 0773501011


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

819 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கன்னி 03 10 32 53

03-10-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4567266 - 4582847

ஜக்பொட் பரிசு ரூபா.3,414,950/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 337,795 | 10/- | 3,377,950/- |
| 2 இலக்கங்கள் | 31,084 | 20/- | 621,680/- |
| 1 இல. + லக்கினம் | 30,703 | 30/- | 921,090/- |
| 2 இல. + லக்கினம் | 2,771 | 100/- | 277,100/- |
| 3 இலக்கங்கள் | 815 | 500/- | 407,500/- |
| 3 இல. + லக்கினம் | 85 | 5,000/- | 425,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,414,950/- | 3,414,950/- |
| மொத்தம் | | | 9,745,270/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,262 | | 10,768,770/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.5461084 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 4575254-8-35 |
| கண்டி | 4576358-1-77 |
| மட்டக்களப்பு | 4572029-6-92 |
| ஹம்பாந்தோட்டை | 4570806-8-31 |
| கொழும்பு | 4582748-2-14 |


## மரண அறிவித்தல்கள்

### அருளானந்தம் மகேந்திரன்



இல, 60 கலட்டி அம்மன் கோயில் வீதி வண்ணார்பண்ணையை வதிவிடமாகக் கொண்ட அருளானந்தம் மகேந்திரன் (01.10.2006) ஞாயிற்றுக்கிழமை மொன்றீயல் கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளாந்தம் சரஸ்வதியின் சிரேஷ்ட புத்திரனும் குலேந்திரன் (France), ஞானேந்திரன் (Canada), கருணேந்திரன் (Canada), ரசீந்திரன் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரேவதி, சிவசோதி, அஜந்தா, பிறேமிலா ஆகியோரின் மைத்துனரும், துவாரகா, அனுசியா, துவித்தா, ருக்சன், கவிசன், நிதுசன், சொனிற்கு, றயிற்றா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இரவிந்திரன்
நாவல் சந்தோர், யாழ்ப்பாணம். தொ.பே.இல 222 8142

Canada
TP.No.: 001 9059130138

### கந்தையா நடராசா

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் களபூமி திக்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தெய்வானை தம்பதியரின் மகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற துரைசிங்கம், அருளம்பலம், மகாலிங்கம் (148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற கனகாம்பிகை, புவனேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் சுசீலா, சித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா, நேசகுமார் ஆகியோரின் மாமனும் அபிராமி, அபிலாஸ், சுளசி, விஸ்வகாந், பரணி, தவப்பிரியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2006)வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களபூமி, திக்கரை வீதி,*
*காரைநகர்.*

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

### நன்னித்தம்பி தர்மரத்தினம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி தர்மரத்தினம் நேற்று முன்தினம் (03.10.2006) செவ்வாய்கிழமை இரவு காலமானார்.

அன்னார் நன்னித்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் வயிரவப்பிள்ளை - பவானிப்பிள்ளை (விழிசிட்டி - தெல்லிப்பழை) தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்) அன்புக் கணவரும் குகதர்மினி (மாணவி-பெல்ஜியம்), அருட்செல்வி (2005 A/L மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.10.2006) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வும்.

*'மலர்மனை'*
*உடுவில், சுன்னாகம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
## தேக்கிளா சுசிலா பத்மநாதன்
(மனைப்பொருளியல் ஆசிரியை-தரம்-I)

எமது பாடசாலையில் கடந்த காலத்தில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியராகவும் ஆசிரிய கழக செயலாளராகவும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து அகவை 50இல் 28 வருட சேவையைப் பூர்த்தி செய்து இன்று ஓய்வு பெறும் எமது ஆசிரியை மேலும் பல சிறப்புகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

*யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி.*

**பாடசாலைச் சமூகம்.**

(54143)

# கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின் விரிவுரையாளர் நா.நாகேந்திரன் அவர்களின் பாசமிகு மாமன் **பெரியதம்பி கணேஸ்** அவர்கள்
*(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உத்தியோகத்தர்)*

கடந்த [01.10.2006] ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.* (54157)

அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

## நாகலிங்கம் இராமச்சந்திரன்
(V.N.R)

(முன்னைநாள் சரவணை பள்ளம்புலம் அருள் மிகு முருகமூர்த்தி திருக்கோவில் பரிபாலகர்)

சுருவிலைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய நா.இராமச்சந்திரன் (V.N.R) அவர்கள் எமது ஆலயத்தை நிர்மாணித்து அதன் வளர்ச்சிக்கு பல்லாண்டு காலம் கண்ணும் கருத்துமாக உறங்காமல் ஓடியோடி எமக்கெல்லாம் வழிகாட்டியவர். அவரின் பிரிவுச்செய்தி அறிந்து துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பள்ளம்புலம் முருகனின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

சரவணை பள்ளம்புலம், முருகமூர்த்தி திருக்கோவில், வேலணை. (54164)

ஆலய அறங்காவற் சபையினர், அர்ச்சகர்கள், பள்ளம்புலம் வாழ் மக்கள்.

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சுப்பிரமணியம் (இந்திரன்)

கொக்குவிலைப் பிறப்பிமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சுப்பிரமணியம் நேற்று (04.10.2006) புதன்கிழமை அகாலமாரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் ராகாந்தத்தின் (நிதி) அன்புக் கணவரும் ரூபன், சுதா, கேவா, சீதா, ராதா, சுமன் ஆகியோரின் தந்தையும் விஜயராஜா, ஜெயராசா, ரதீஸ், பிரேமா, ஜமேலாராணி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான நடராசா, ஞானம், மகாலிங்கம், பேபி மற்றும் தர்மலிங்கம் பஞ்சலிங்கம், சரஸ்வதி, பரஞ்சோதி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பபில், அனித்தா,அனோஜன், அனிஸ்ரன், உஷாயினி, ஆயிஷா, மயூரேசன், லிகாந்திகா,அபிரேசன், நிரூசிகன், நிரூசிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05.10.2006) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
**விஜயராஜா (மருமகன்).**

## நாகேஸ்வரி சபாரட்ணம்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த நாகேஸ்வரி சபாரட்ணம் (சுனிதா மரக்காலை) நேற்று (04.10.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வல்லி சபாரட்ணத்தின் அன்பு மனைவியும் சாந்தகுமார், செந்தில்குமார், சசிகுமார், சுனிதா, சஞ்சீவ்குமார் ஆகியோரின் பாசமிகுதாயும் உதயவதி சாந்தகுமார், பிரதீபா செந்தில்குமார், உதயசீலன், விஜயதர்சினி சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் உதயசாந், ஆத்மீகா, ஆர்ணிகன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் நாகராசா, நகுலேஸ்வரி, வீரபத்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2006) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுனிதா மரக்காலை, அல்வாய் தெற்கு, அல்வாய்.*

தகவல்:
சி.சாந்தகுமார் *(மகன்).*

# ஊரிக்காட்டில் பெண் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஒக்.5

வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டுப் பகுதியில் பெண் ஒருவர் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த குட்டியம்மன் என அழைக்கப்படும் துரைநாயகம் ஜெயமலர் (வயது 50) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தாய் என்றும் திருகோணமலையில் இருந்து இங்கு வந்து வசித்தவர் என்றும் அறிய வருகிறது.

சடலம் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (1)

# துடுப்பாட்ட பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான (தரம் 1) பயிற்சிப் பட்டறையும் பரீட்சையும் இம்மாதம் ரண்கிரிடாபுள்ள சர்வதேச துடுப்பாட்ட ஸ்ரேடியத்தில் நடைபெறவுள்ளன.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி பரீட்சையில் நுாணசித்தி பெற்றவர்களும் முழுமையாக பரீட்சையில் சித்திபெறாதவர்களும் மீள் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அதற்கான விண்ணப்பப் படிவத்தை கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பெற்று எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் பெறுமாறு துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(1- 203)

# ஊர்காவற்றுறை சங்கத்தின் கிளையல்ல

யாழ்ப்பாணம்,ஒக்.5

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் கைது உத்தரவு வழங்கப்பட்டவர் வேலணை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் என்றும் -

ஊர்காவற்றுறை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் கிளையாக அச்சங்கம் இயங்கவில்லை என்றும் - ஊர்காவற்றுறை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் வேலணைக் கிளையின் பொது முகாமையாளரை கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டதாக நேற்றைய உதயன் 2ஆம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து பிரஸ்தாபித்தே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

## வாழ்த்துச் செய்தி

**இன்றைய நாளில் ஆசிரியர் தின விழாவை கொண்டாடும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கும் மற்றும் சகல ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**மணவர் முதல்வர் சபை (2007 / 2008)**
**யாழ். மத்திய கல்லூரி**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் வசதி கொண்ட வீடு தேவை.
**தொடர்பு:**
222 3605, 222 3817, 222 7125

# மரண அறிவித்தல்

*குமாரசாமிக்குருக்கள் கமலாம்பிகைஅம்மா*
(தவம்)

அச்செழுவைச் சேர்ந்த கனகாம்பிகை அம்மா நேற்று (04.10.2006) புதன் கிழமை காலமானார்.

அன்னார் குமாரசாமிக்குருக்கள் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிதம்பரேஸ்வரசர்மா, ராமகிருஸ்ணசர்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2006) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கு.சிதம்பரேஸ்வரசர்மா (சகோதரன்).**

*அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராஜா நேசரத்தினம்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா நேசரத்தினம் 02.10.2006 திங்கள் இரவு அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நடராஜாவின் அன்பு மனைவியும், றயனி (அமெரிக்கா), சிறிறஞ்சன் (கனடா), வினோஜினி, சிறிகாந்தன் (கனடா), சுமதி (கொழும்பு), றமனி (கனடா), மீனலோஜினி (ஆசிரியை- கொழும்பு கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயம்), செந்தில்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கணேசலிங்கம் (அமெரிக்கா), சந்திரிக்கா (கனடா), சிவகுமார் (இலங்கை வங்கி மேற்தரக் கிளை யாழ்ப்பாணம்), கருணைநாயகி, விஜயகுமார் (ஆசிரியர், கொழும்பு), இளம்பூரணன் (கனடா), ஞானசம்பந்தன் (C.B.A), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற அன்னரத்தினம், நவரத்தினம், குணரத்தினம், ஞானரத்தினம் மற்றும் பவளரத்தினம் (கொழும்பு), யோகரத்தினம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், கோலர்த்தனன் (கொழும்பு), கேதுஷன் (கொழும்பு), தாமரலச்சுமி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் இன்று (05.10.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*232, சேர் பொன். இராமநாதன்வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**சின்னத்துரை சிவகுமார்,**
*(இலங்கை வங்கி மேற்தரக் கிளை யாழ்ப்பாணம்).*

## நாகமுத்து நடராசா



நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு மருதானை கப்பித்தாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நடராசா நேற்று (04.10.2006) புதன்கிழமை கொழும்பில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் செல்வநாதன் (விவசாய ஆராய்ச்சியாளர், திருநெல்வேலி) சரோஜினிதேவி (கொழும்பு) காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரி, பேரின்பநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசௌந்தரி,தேவமதி காலஞ்சென்ற இராஜகுலேந்திரன்(நில அளவையாளர்) ஆகியோரின் மாமனும் பிரியந்தி - மணியழகன்(பிரான்ஸ்) அனுஜந்தி - சசிகரன், தனுஜந்தி, புராதனி, சுதாகர், தேவகி, வைதேகி,சகிகுமார் - நிருஷா (லண்டன்), குமுதினி - தயாபரன் (லண்டன்), பிரேம்குமார் ஆகியோரின் பேரனும் நயனன், மேகலன் (லண்டன்) ஆகியோரின் பூட்டனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு றேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2006) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2/1,சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (54161)

தகவல்:
**ந.செல்வநாதன்,** (மகன்).

## வேலுப்பிள்ளை பொன்னையா

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா நேற்று (04.10.2006) புதன்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், அமரர் இராசரத்தினம் , மற்றும் செல்லத்துரை, அமரர் கந்தையா, அமரர் அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், கிருஸ்ணானந்தன் (பவானி களஞ்சியம் - நீர்வேலி), பேரானந்தம் (கனடா), தவானந்தம், இராசலிங்கம், சிவானந்தம் (கனடா) ஆகியோரின் தந்தையும், ஈஸ்வரி (ஆசிரியை - சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர் ), மங்களேஸ்வரி (கனடா), கர்ணரூபி, சியாமிளா ஆகியோரின் மாமனும், தேவதர்சன், சுதர்சனா, திவாகரன், சர்மிளா, தீபன், சகானா, துவாரகா, சினோஜன், பவிலீணன், ஹரிவிலான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிலன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பவானி களஞ்சியம் இராஜ வீதி, நீர்வேலி. தொ.பே.: 4591430* (54165)

தகவல்:
**பொ.கிருஸ்ணானந்தன்,** *(மகன்).*

## அண்ணாமலை பூங்காவனம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை பூங்காவனம் நேற்று (04.10.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அண்ணாமலையின் மனைவியும் மகேந்திரன், பத்மநிதி, தயாநிதி, ரவீந்திரன்(ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்), தவராஜா(லங்கா சிமெந்து லிமிட்டெட்), சுதாநிதி ஆகியோரின் பாசமிகு தாயும் அரியமலர், செல்வராசா, பஞ்சலிங்கம் (ஏழாலை பெரியதம்பிரான் பூசகர்) சுபத்திரா, விமலராணி, சற்குணராசா (ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (05.10.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு, ஏழாலை.*

தகவல்:
பிள்ளைகள்.

# வன்னியிலும் உணவுத் தட்டுப்பாடு; பொருள்கள் அனுப்புவதற்கு முயற்சி

## உலக உணவுத் திட்ட நிறுவனம் தகவல்

நியூயோர்க், ஒக்.5

இலங்கையின் வடக்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக உலக உணவுத் திட்ட முகவர் நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் கவலை தெரிவிக்கப்பட்டி ருக்கிறது.


படையினரின் நடவடிக்கை காரணமாக உள்ளூரில் இடம்பெயர்ந்த 63 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தஞ்சமடைந்து வாழ்கின்றனர். அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இவர்களுக்கு உணவு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை டபிள்யூ.எவ்.பி. என்கின்ற எமது உலக உணவுத் திட்ட நிறுவகமே எடுத்திருக்கிறது என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதி வாழ் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பதை உறுதிப்படுத்து முகமாக இலங்கை அரசுடன் தமது நிறுவகம் அடிக்கடி தொடர்பு கொண்டு பேசி தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும் அது அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

"இலங்கையின் வடக்கே யாழ்ப் பாணம், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் நிலவி வரும் உணவுப் பொருள்களின் பற்றாக் குறை, தட்டுப்பாடு தொடர்பாக எமது நிறுவகம் அதிக அக்கறை காட்டியே வந்திருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையிலான மோதல்கள் காரணமாக சுமார் 63 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் அரைவாசிப் பேர் சிறுவர்கள். உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் பட்டியலில் சேர்ந்துள்ள இவர்களுக்கு உணவுப் பொருள்களின் விநியோகம் தடைப்பட்டே வந்திருக்கிறது."- என்றும் உணவுத் திட்ட நிறுவகத்தின் பேச்சாளரான கிமோன் புளூயெஸ் ஜெனிவாவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

உலக உணவுத் திட்ட நிறுவகம், உள்ளூரில் இடம்பெயர்ந்த வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கி வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்று கிடைப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு உயர் மட்ட மாநாடு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை இலங்கை அரசுக்கும், ஐ.நா. மனித உரிமைகள் இணைப்பாளருக்குமிடையே நடைபெற ஏற்பாடாகியுள்ளது என்று உணவுத் திட்ட நிறுவகப் பேச்சாளர் மேலும் கூறினார்.



வன்னிப்பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பாடசாலை பகிஷ்கரிப்பு மற்றும் பணிப்புறக்கணிப்பின் போது யுனிசெப் அமைப்பு பிரதிநிதிகளிடம் மாணவர்கள் மகஜர் கையளிப்பதை படத்தில் காணலாம். கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சகல பாடசாலைகளும் நேற்று செயலிழந்திருந்தன.

## இரு கட்சிகளிடையே இணக்கத்தை ஏற்படுத்த சர்வதேசக் குழு வருகை

கொழும்பு, ஒக். 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக சர்வதேச அமைப்பான நாடாளுமன்றங்களிடையிலான ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் ஆண்டெர்ஸ் பி.ஜோன்சன் நேற்றுக் கொழும்பு வருகை தந்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த அழைப்பை ஏற்று ஆண்டெர்ஸ் பி.ஜோன்சன் தலைமையிலான குழுவினர் கொழும்பு வருகை தந்துள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளை இக்குழுவினர் மேள்கொள்ளவுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவை இன்று வியாழக் கிழமை இக்குழுவினர் சந்திக்கவுள்ளனர். ஸ்ரீலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஆகியோரையும் இக்குழுவினர் சந்தித்துப் பேசவுள்ளனர்.

(ஐ-12)

## வடமராட்சி கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

வடக்கில் முன்னணிக் காவலரண் பகுதியில் அரசுப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சிறு மோதல்கள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வான் தாக்குதல் தொடர் பாக விடுதலைப் புலிகள் தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

இத்தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், வன்முறைகளை நிறுத்த வேண்டும் என்று சர்வதேச சமூகம் அழைப்பு விடுத்துள்ள நிலையில் இத்தகைய தாக்குதல்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசின் சமாதான ஈடுபாடு கேள்விக் குறியாக உள்ளது என்றார்.

"எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர், செவ்வாய்க் கிழமை ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த போது பூநகரி பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் வான் குண்டுத் தாக்குதலை நடத்தினர்" என்றும் இ. இளந் திரையன் தெரிவித்தார்.

(த)

## நோர்வேயை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையில் திரட்டி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும் கலந்து கொண்டார்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பின் பல வீதிகளில் வாகனப் போக்கு வரத்து தடைப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான படையினரும், பொலிஸாரும் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி குவிக்கப்பட்டனர். நோர்வே தூதரகம் அமைந்துள்ள 'வோட் பிளேஸ்' பகுதியில் வீதிகள் மூடப்பட்டு படையினரும், பொலிஸாரும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

ஒரு கட்டத்தில் நோர்வே தூதரகத்தை நோக்கிச் செல்ல ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்ற போது பொலிஸார் தடைகளைப்போட்டு அவர்களைத் தடுத்துநிறுத்தினர்

(ஐ-12)

## பேச்சில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"முஸ்லிம் மக்கள் வன்முறைகளால் பாதிக்கப்படுகிறார்கள். இதனைத் தடுப்பதற்கு இரு தரப்பும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தற்போது நடைபெறுகின்ற ஆட்கடத்தல்கள், கொலைகள் தொடர்பாக அரசும் புலிகளும் நம்பிக்கை தரும் விதத்தில் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்" - என்றும் இச்சந்திப்பில் போவரிடம் ஹக்கீம் வலியுறுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக இணைத் தலைமை நாடுகளும் காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் போவரிடம் ஹக்கீம் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த நோர்வே தூதர் "சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசும் புலிகளும் தங்களுடைய வெளிப்படையான விடயங்களை இன்னும் நோர்வேக்கு தெரியப்படுத்தவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குள் இதற்கு ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கிறோம்" என்று ஹக்கீமிடம் கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

"மனித உரிமைகளை மீறுவோர் மீது அரசும் புலிகளும் பாரபட்சமின்றி விசாரணை நடத்தி அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி மக்களுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் செயற்பட வேண்டும்" - எனவும் இச்சந்திப்பில் ஹக்கீம் வலியுறுத்தினார் எனத் தெரிகிறது.

(க)

## ஒஸ்லோவிலா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைத் தலைமை நாடுகள் கேட்டுக் கொண்டபடி, அனுசரணைத் தரப்பான நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தெரிகின்றது.

ஆனால், நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு தென்னிலங்கையில் பௌத்த-சிங்களக் கடும் போக்காளர்களின் தீவிர எதிர்ப்பை எதிர்கொள்வதும் இலங்கை அரசு, அவர்களைச் சமாளிப்பதற்காக உத்தேசப் பேச்சை அனுசரணைத் தரப்பின் இடமான நோர்வேயில் நடத்தாமல் தவிர்க்கச் செய்ய விரும்புகின்றது எனவும் கூறப்படுகின்றது.

இந்தக் காரணத்தினால் -

கடந்த சுற்று அமைதிப்பேச்சை நடத்திய சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா நகரிலேயே இம்முறையும் பேச்சை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசு தரப்பு வலியுறுத்துவதாகக் தெரிகின்றது.

பேச்சு நடத்தும் திகதி விடயத்திலும் அரசுத் தரப்பிற்கும் புலிகள் தரப்பிற்கும் தனித் தனியாக ஏற்புடைய திகதிகளைப் பெற்றுள்ள நோர்வே அனுசரணையாளர்கள், இரு தரப்புக்கும் இணக்கமான திகதியை இன்னும் இறுதி செய்யவில்லை என்றும் தெரிகின்றது.

பேச்சு நடக்கும் திகதி, இடம் ஆகியவற்றில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் தாம் வெற்றி கண்டாலும், பேச்சு மேசைக்கு முன்னான ஏற்பாடுகளைக் கவனிப்பதிலும் - அது தொடர்பான அற்ப விடயங்களிலும் - மிகுந்த சிக்கல்களைத் தாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அனுசரணையாளர்கள் தரப்பினர் கருதுகின்றனர்.

பேச்சுக்குச் செல்லும் பிரதிநிதிகள் குழுவின் தெரிவு, புலிகளின் பிரதிநிதிகள் குழுவை வன்னியிலிருந்து, பேச்சு நடைபெறும் நாட்டுக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச்சென்று திரும்ப கூட்டிவருவதற்கான ஒழுங்குகள், அதற்கான மார்க்கம் என்பனவற்றிலும் -

உத்தேச பேச்சுக்கான நடைமுறைகள், ஒழுங்குகள் என்பனவற்றிலும் -

இணக்கமான ஏற்பாடுகளைச் செய்வதில் பெரும் நெருக்கடி தங்களுக்கு இருப்பதை நோர்வே அனுசரணைத் தரப்பு ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறன்து. (உ)

## கரவெட்டியில் கிரனேட் வீச்சு இரு படையினர் உட்பட 6 பேர் காயம்

உடுப்பிட்டி, ஒக்.5

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்திக்கு சமீபமாக இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் வீச்சில் படையினர் இருவர் உட்பட அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் படையினரை இலக்குவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஜீ. கே. சோமசிறி (வயது - 43), ரஞ்சித் குணதிலக (வயது - 28) ஆகிய இரு படையினரும் -

சரஸ்வதி வித்தியாலயம் இராஜ கிராமம் கரவெட்டியைச் சேர்ந்த முருகேசு யோகராசா (வயது- 48), கரவெட்டி வடக்கைச் சேர்ந்தவர்களான கணபதிப்பிள்ளை முருகமூர்த்தி (வயது - 54), அருளானந்தம் பிலிப்குமார் (வயது - 36), புதுத்தோட்டம் நெல்லியடி கிழக்கைச் சேர்ந்த சத்தியேஸ்வரன் சபேஸ் (வயது-25) ஆகிய நான்கு பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உடனடிச்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் காயமடைந்த படையினர் பலாலிக்கும் பொதுமக்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டன எனவும் சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் தாக்குதலின்போது அப்பகுதியிலுள்ள சில கடைகளும் சேதமடைந்துள்ளன.

(த - 155- 203)

## மெதடிஸ்த சபை, உறுப்பினர்களுக்கு பண உதவி

வடமராட்சி,ஒக்.5

இன்றைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வடமராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த குடும்பங்களுக்கு அவசர உதவியாக தலா ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முதன்மைக் குரு வண.டி. அழகராசாவினால் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள தேவாலயங்களில் வைத்து இந்த அவசர நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## பாடசாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கு செய்தல், மாணவர்களின் செயற்பாட்டுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் ஆசிரியர் சமூகம் எதிர்கொள்ளும் இடர்பாடுகளையும் யாழ்.ஆயர் மூலமாகவும் சமாதான நல்லெண்ணக் குழு மூலமாகவும் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர் கல்வி வீணடிக்கப்படாமல் பாடசாலைகள் திறக்கப்பட்டு மாணவர் கல்வியைத் தொடர உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், கலந்துரையாடலின் போது முடிவுசெய்யப்பட்டது.

இது போன்ற ஒன்றுகூடல்களை தேவைக் கேற்றபடி நடத்தவும் மாணவர் கல்வி எந்தப் பாதிப்பும் இன்றித் தொடரவும் வழி செய்யவும் முடிவுசெய்யப்பட்டது.

### கோரிக்கைகள்

மாணவர் கல்வியைத் தொடரத் தக்க சூழலை ஏற்படுத்த முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

* பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் இராணுவ நெருக்கடி, உயிர் அச்சுறுத்தல் என்பன நீக்கப்படுதல்.
* மாணவர்கள் கற்கும் மனநிலையை ஏற்படுத்தும் முகமாக ஊரடங்கு முற்றாக நீக்கப்படுதல். சுமுகமான போக்குவரத்துக்கு வழி செய்தல். பாடசாலைகளுக்கு அருகில் உள்ள இராணுவ நிலைகள். ஆட்டிலறி தளங்கள் அகற்றப்படுதல்.
* பாடசாலை நிர்வாக விடயங்களில் படையினர் தலையிடுவதை நிறுத்தல். பாடசாலைச் சூழலில் படையினரின் ரோந்து, நிலைகொண்டு நிற்றல் என்பன தவிர்க்கப்படல். பாடசாலை வேளைகளில் சுற்றிவளைப்பு, திடீர் ஊரடங்கு என்பன தவிர்க்கப்படல்.
* படைத்தரப்பினரின் கொடூரக் கொலைகள், ஆள் கடத்தல் என்பன நிறுத்தப் படல்.
* படையினர் பாவனைக்கு தடை செய்திருக்கும் பாடசாலைகளைத் திறத்தல். பொருளாதாரத்தடை. தொழில் தடை என்பவற்றை நீக்கி பஞ்சம் பட்டினி போக்குதல்.

கலந்துரையாடலின் இறுதியில் - மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல உடன் ஆவன செய்யும் படியும் பாடசாலை தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்யும் படியும் யாழ் ஆயர் வேண்டுகோள் விடுத்தார்- என்றுள்ளது.

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*